THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4D**

5423–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours — Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the role played by the General Assembly when the Security Council failed to protect International peace and security.

   பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை காக்க பாதுகாப்புச் சபை தவறிய போது பொதுச்சபையின் பங்கை ஆராய்க.

2. List out 12 salient features of the UN Convention on the Law of the Sea, 1982.

   1982-ம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய ஐ.நா. சாசனத்தின் 12 முக்கிய குணாதிசயங்களை பட்டியலிடுக.

3. Analyse the scope of state responsibility especially in the light of the ICJ's decision in the 'Corfu channel case' and the 'Trail-Smelter Arbitration'.

   பன்னாட்டு நீதிமன்றத்தின் 'கார்ஃபூ கால்வாய்' வழக்கின் தீர்ப்பு மற்றும் 'டிரயில் காரீயம் உருக்கு' இசைவுத்தீர்ப்பின் அடிப்படையில் நாட்டின் பொறுப்புநிலையின் நோக்கெல்லையை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the various stages in formation of an International Treaty?

   ஒரு பன்னாட்டு உடன்படிக்கை உருவாவதற்கான பல்வேறு படிநிலைகள் யாது ?

5. Examine with case laws how the Indian Courts apply International Law in the Municipal sphere.

இந்திய நாட்டிற்குள் நாட்டிடைச் சட்டத்தை இந்திய நீதிமன்றங்கள் எவ்வாறு அமல்படுத்துகிறது என்பதை சட்டத்தீர்ப்புரைகள் மூலம் ஆராய்க.

6. Discuss about the rights of the succeeding state with respect to 'localised treaties' by referring to Gabcikovo-Nagymaros Dam Project Case.

கேப்சிகோவோ - நேகிமேரோஸ் அணை கட்டுமான வழக்கை மேற்கோள் காட்டி, 'உள்ளாட்சி நிருவாகம் தொடர்புடைய உடன்படிக்கைகள்' பொருத்து இறங்குரிமை பெற்ற நாட்டின் உரிமைகள் பற்றி விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) International custom

சர்வதேச வழக்காறு

(b) Loss of Nationality

நாட்டுரிமை இழத்தல்

(c) Rule of Double Criminality

இரு நாடுகளிலும் குற்றம் என்கிற விதி

(d) Art. 51 of the Indian Constitution

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 51.

(e) Holy See

புனித நாடு

(f) Duties of a consulate

வணிகத்தூதரகத்தின் பணிகள்

(g) International Tribunal for the Law of the Sea (ITLOS)

கடல் சார் சட்டம் பற்றிய சர்வதேச தீர்ப்பாயம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An Indian interior designer entered into a contract with South African embassy in New Delhi to beautify the embassy. The consideration is 30 crores but the South African embassy refuses to pay the contract amount and claims diplomatic immunity. The Indian contractor files a writ petition in the Supreme Court. Can he succeed?

புதுதில்லியில் உள்ள தென்ஆப்பிரிக்க நாட்டின் தூதரகத்தை அழகுபடுத்த ஓர் இந்திய உள் அலங்கார நிபுணரிடம் ஒப்பந்தம் போடப்பட்டு முடிக்கப்பட்டது. தங்களுக்கு தூதரக விலக்குரிமை இருப்பதாக கூறி ஒப்பந்தத் தொகையான ரூ.30 கோடியை தென் ஆப்பிரிக்க தூதரகம் தர மறுக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் இந்திய நிபுணர் நீதிப்பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்கிறார். அவர் வெல்வாரா?



9. State 'A' was bifurcated into states 'A' and 'B'. State 'A' has a bigger land mass and was originally the member of the UNO. Now state 'B' claims that only state 'B' is the original member of the UNO and approaches ICJ. Decide.

'A' என்கிற நாடு இரண்டாக பிரிந்து 'A' மற்றும் 'B' என்று இரண்டு தனி நாடுகளாயின. தற்போது 'A' நாடு பெரிய நிலப்பரப்பைக் கொண்டு ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் நாடாக திகழ்கிறது. ஆனால் 'B' நாடு தாங்கள் தான் ஐ.நா. சபையின் அசல் உறுப்பினர் என்று கூறி சர்வதேச நீதிமன்றத்தை நாடியது. தீர்மானிக்கவும்.

10. A ship belonging to country 'X' but registered in country 'Y' engaged in smuggling contraband goods from country 'Y' to country 'Z'. The ship was sunk by coastguards of country 'Z' in the high seas on hot pursuit. Country 'Y' claims damages from country 'Z'. Decide.

'Y' நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஆனால் 'X' நாட்டிற்கு சொந்தமான ஒரு கப்பல் 'Y' நாட்டிலிருந்து 'Z' நாட்டிற்கு அரசுக்கு எதிரான சரக்குகளை கடத்துவதில் ஈடுபட்டிருந்தது. 'Z' நாட்டின் கடலோரக் காவல் படையானது நெடுங்கடலில் அக்கப்பலை துரத்திப்பிடித்து அழித்தது. 'Z' நாட்டிடமிருந்து 'Y' நாடு இழப்பீடு கோரி வழக்காடியது. தீர்மானிக்கவும்.